# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2383/28 - 2024 මැයි මස 08 වැනි බදාදා - 2024.05.08

*2383/28 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவனமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PB 4833 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதும் மஹேன்வத்த, பிட்டிபன, ஹோமாகமவில் அமைந்துள்ளதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மெனேஜ்மன்ட் லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதிய 2356/ 32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை, அதற்கான நிரல் I இல் காணப்படும் "சட்டம் மற்றும் வியாபார கற்கைகளில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி" என்னும் பதிவையும், நிரல் II இல் உள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக, இதற்கான II ஆம் அட்டவணையின் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன்கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

## அட்டவணை I

### நிபந்தனைகள்

1. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது, குறைந்தபட்சம் 60 திறமை மதிப்பீடுகளுடன் கல்வி முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவத்தில் கல்வி முதுமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 10) தொடர்பில் இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் :

(அ) இயைபான பாடப்பரப்பில் 30 திறமை மதிப்பீடுகளை உள்ளடக்கிய இளமாணி பட்டமொன்று ; அல்லது

(ஆ) இயைபான கற்கைப் பரப்பில் SLQF மட்டம் 6 அல்லது அதற்கு மேலான தகைமையொன்று ; அல்லது

(இ) SLQF மட்டம் 6 அல்லது அதற்கு மேலான உயர் தொழிற்தகைமையொன்று ; அல்லது

(ஈ) உயர்கல்வி நிறுவகத்தின் கல்வியியல் அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டவாறு, 0-4 எனும் அளவீட்டின்மேல் 3.0 எனும் குறைந்தபட்ச தரப் புள்ளி சராசரியொன்றுடனான NVQ மட்டம் 7 இனைப் பூர்த்திசெய்துள்ளமையானது, அத்துறையில் விசேடத்துவ அனுமதிக்காக கருத்திற்கொள்ளப்படலாம்.

2. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை II

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| கல்வி முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவத்தில் கல்வி முதுமாணி | எம்ஈட (கல்வி முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவம்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2024, மே 03.

EOG 05-0067